Koviloor Digital Library

திருத் தொண்டர் திருமுறை

92

(சேக்கிழார்)

5-5

தொகுத்தவர் :

தி. கி. நாராயணசாமி

2, சீதாராம நகர், சென்னை N.T.

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: -436846)

Acc. No.
4089.

1398

1961

விலை 20 புதுக் காசுகள்

Koviloor Digital Library

திருத்தொண்டர்கள் தோன்றிய ஊர்கள்

(திருச்சிற்றம்பலம் - கி. நாராயணசாமி)

1 *அம்பர்-சோமாசிமாறர் 5/39 (3635)
*ஆக்கூர்-சிறப்புலியார் 42 (3659–64)
ஆதனூர்-நாளைப்போவார் 20 (1046)
ஆமூர்-நாவுக்கரசர் 24, 25 (1282)
5 *ஆரூர்-தண்டி அடிகள் 37 (3596–7)
இருக்கு வேளூர்-கணம்புல்லர் 58 (4060)
†இளையான்குடி-மாறர் 1/4 (440)
உடுப்பூர்-கண்ணப்பர் 11 (651)
*உறையூர்-புகழ்ச்சோழர் 7/50 (3947)
10 எயினனூர்-ஏனாதி நாதர் 10 (608)
*எருக்கத்தம்புலியூர்-நீலகண்டயாழ்ப்பாணர் 2 (4220)
†ஏமப்பேறூர்-நமிநந்தி அடிகள் 31 (1871)
*ஒற்றியூர்-கலியர் 54 (4027)
†கஞ்சாறூர்-மானக்கஞ்சாறர் 2/13 (871)
15 கணமங்கலம்-அரிவாள்தாயர் 14 (908)
*கடவூர்—(1) காரியார் 59 (4068–9)
(2) குங்கிலியக்கலயர் 2/12 (836)
*கருவூர்-எறிபத்தர் 9 (552)
†களந்தை-கூற்றுவர் 6/47 (3935–42)
*காஞ்சி—(1) ஐயடிகள் 56 (4057)
(2) திருக்குறிப்புத்தொண்டர் 21 (1130)
20 காரைக்கால்-அம்மையார் 28 (1722)

Koviloor Digital Library

திருத் தொண்டர் திருமுறை

(சேக்கிழார்)

உலகு எலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்,
நிலவு உலாவிய நீர் மலி வேணியன்,
அலகு இல் சோதியன், அம்பலத்து ஆடுவான்—
மலர் சிலம்பு அடி வாழ்த்தி, வணங்குவாம். 1

மதி வளர் சடை முடி மன்றுளாரை, முன்,
துதிசெயும் நாயன்மார் தூய சொல்மலர்
பொதி நலன் நுகர்தரு புனிதர் பேர் அவை,
விதி முறை உலகினில் விளங்கி, வெல்கவே! 2

பத்தியின் பாலர் ஆகிப் பரமனுக்கு ஆள் ஆம் அன்பர்,
தத்தமில் கூடினார்கள், தலையினால் வணங்குமாபோல்,
மொய்த்த நீள் பத்தியின் பால் முதிர் தலை வணங்கி, மற்றை
வித்தகர் தன்மை போல விளைந்தன—சாலி எல்லாம். 3

Koviloor Digital Library

அரசு கொள் கடன்கள் ஆற்றி, மிகுதி கொண்டு அறங்கள் பேணி,
பரவ அருங் கடவுட் போற்றி, குரவரும் விருந்தும் பண்பின்
விரவிய கிளையும் தாங்கி, விளங்கிய குடிகள் ஓங்கி,
வரை புரை மாடம் நீடி, மலர்ந்துள—பதிகள் எங்கும். 4

மாசு இலாத மணி திகழ் மேனிமேல்
பூசு நீறு போல் உள்ளும் புனிதர்கள் ;
தேசினால் எத்திசையும் விளக்கினார் ;
பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார். 5

பூதம் ஐந்தும் நிலையில் கலங்கினும்
மாது ஓர் பாகர் மலர்த்தாள் மறப்பிலர் ;
ஓது காதல் உறைப்பின் நெறி நின்றார் ;
கோது இலாத குணப் பெருங் குன்று அனார். 6

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்;
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்;
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி,
வீடும் வேண்டா விறலின் விளங்கினார். 7

Koviloor Digital Library

ஆரம் கண்டிகை; ஆடையும் கந்தையே;
பாரம் ஈசன் பணி அலது ஒன்று இலர்;
ஈர அன்பினர்; யாதும் குறைவு இலார்;—
வீரம் என்னால் விளம்பும் தகையதோ! 8

'மற்று நீ வன்மை பேசி, “வன்தொண்டன்” என்னும் நாமம்
பெற்றனை; நமக்கும் அன்பில் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே ஆகும்; ஆதலால், மண்மேல் நம்மைச்
சொல்-தமிழ் பாடுக!' என்றார்—தூ மறை பாடும் வாயார். 9

மன்றுள் ஆடும் மதுவின் நசையாலே
மறைச் சுரும்பு அறை புறத்தின் மருங்கே
குன்று போலும் மணி மா மதில் சூழும்
குண்டு அகழ்க் கமல வண்டு, அலர் கைதை
துன்று நீறு புனை மேனிய ஆகி,
தூய நீறு புனை தொண்டர்கள் என்ன,
சென்று சென்று முரல்கின்றது கண்டு,
சிந்தை அன்பொடு திளைத்து எதிர் சென்றார். 10

Koviloor Digital Library

ஐந்து பேர் அறிவும் கண்களே கொள்ள,
அளப்ப அருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆக, குணம் ஒரு மூன்றும்
திருந்து சாத்துவிகமே ஆக,
இந்து வாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லை இல் தனிப் பெருங் கூத்தின்
வந்த பேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து,
மாறு இலா மகிழ்ச்சியின் மலர்ந்தார். 11

‘தெள் நிலா மலர்ந்த வேணியாய்! உன்தன்
திருநடம் கும்பிடப் பெற்று,
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பம் ஆம்’ என்று,
கண்ணில் ஆனந்த அருவி நீர் சொரிய,
கைம்மலர் உச்சிமேல் குவித்து,
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார், பரவினார், பணிந்தார். 12

Koviloor Digital Library

'கற்பகத்தின் பூங்கொம்போ! காமன் தன் பெரு வாழ்வோ!
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ! புயல் சுமந்து,
வில், குவளை, பவளம், மலர், மதி, பூத்த விரைக் கொடியோ!
அற்புதமோ! சிவன் அருளோ! அறியேன்!' என்று அதிசயித்தார்.

ஆதி ஆய், நடுவும் ஆகி, அளவு இலா அளவும் ஆகி,
சோதி ஆய், உணர்வும் ஆகி, தோன்றிய பொருளும் ஆகி,
பேதியா ஏகம் ஆகி, பெண்ணும் ஆய், ஆணும் ஆகி,
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி! போற்றி! 14

கற்பனை கடந்த சோதி கருணையே உருவம் ஆகி,
அற்புதக் கோலம் நீடி, அரு மறைச் சிரத்தின் மேல் ஆம்
சிற்பர வியோமம் ஆகும் திருச் சிற்றம்பலத்துள் நின்று,
பொற்புடன் நடம் செய்கின்ற பூங் கழல் போற்றி! போற்றி! 15

மறு இலா மரபின் வந்து, மாறு இலா ஒழுக்கம் பூண்டார் ;
அறு தொழில் ஆட்சியாலே அருங் கலி நீக்கியுள்ளார் ;
உறுவது நீற்றின் செல்வம் எனக் கொளும் உள்ளம் மிக்கார் ;
பெறுவது சிவன்பால் அன்பு ஆம் பேறு எனப் பெருகி வாழ்வார் ;

Koviloor Digital Library

ஞானமே முதலா நான்கும் நவை அறத் தெரிந்து மிக்கார்;
தானமும் தவமும் வல்லார்; தகுதியின் பகுதி சார்ந்தார்;
ஊனம் மேல் ஒன்றும் இல்லார்; உலகு எலாம் புகழ்ந்து போற்றும்
மானமும் பொறையும் தாங்கி, மனையறம் புரிந்து வாழ்வார். 17

பொய் கடிந்து அறத்தின் வாழ்வார்; புனல் சடைமுடியார்க்கு அன்பர்;
மெய்யடியார்கட்கு ஆன பணி செயும் விருப்பில் நின்றார்;
வையகம் போற்றும் செய்கை மனையறம் புரிந்து வாழ்வார்;
சைவமெய்த் திருவின் சார்வே பொருள் எனச் சாரும் நீரார். 18

'சொல்லுவது அறியேன்! வாழி!
தோற்றிய தோற்றம் போற்றி!
வல்லை வந்து அருளி, என்னை
வழித் தொண்டு கொண்டாய் போற்றி!
எல்லை இல் இன்ப வெள்ளம்
எனக்கு அருள்செய்தாய் போற்றி!
தில்லை அம்பலத்துள் ஆடும்
சேவடி போற்றி!' என்ன— 19

Koviloor Digital Library

ஆரம் என்பு புனை[illegible]
அன்பர் என்பது ஓர் தன்மையால்,
நேர வந்தவர் யாவர் ஆயினும்,
நித்தம் ஆகிய பத்தி முன்
கூர, வந்து, எதிர்கொண்டு, கைகள்
குவித்து நின்று, செவிப்புலத்து
ஈர மென் மதுரப் பதம் பரிவு
எய்த, முன் உரை செய்தபின், 20

கொண்டு வந்து, மனைப் புகுந்து,
குலாவு பாதம் விளக்கியே,
மண்டு காதலின் ஆசனத்திடை
வைத்து, அருச்சனை செய்தபின்,
உண்டி நாலு விதத்தில் ஆறு
சுவைத் திறத்தினில் ஒப்பு இலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில்
அமுசெய்ய அளித்துளார். 21

Koviloor Digital Library

அன்பனே! அன்பர் பூசை
அளித்த நீ அணங்கினோடும்
என் பெரும் உலகை எய்தி,
இரு நிதிக்கிழவன் தானே
முன் பெரு நிதியம் ஏந்தி;
மொழி வழி ஏவல் கேட்ப,
இன்பம் ஆர்ந்திருக்க!' என்றே
அருள் செய்தான்— எவர்க்கும் மிக்கான். 22

'தேடிய மாடு நீடு செல்வமும் தில்லை மன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க்கு ஆவன ஆகும்' என்று
நாடிய மனத்தினோடு, நாயன்மார் அணைந்த போது;
கூடிய மகிழ்ச்சி பொங்க, குறைவு அறக் கொடுத்துவந்தார். 23

ஞாலம் உய்ய, நாம் உய்ய, நம்பி, சைவ நல் நெறியின்
சீலம் உய்ய, திருத்தொண்டத் தொகை முன் பாட, செழு மறைகள்
ஓலமிடவும் உணர்வு அரியார் அடியாருடனும் உளது என்றால்,
ஆலம் அமுதுசெய்த பிரான் அடியார் பெருமை அறிந்தார் ஆர்?

Koviloor Digital Library

சிந்தைசெய்வது சிவன் கழல் அல்லது ஒன்று இல்லார் ;
அந்தி வண்ணர்தம் அடியவர்க்கு அமுது செய்வித்து,
கந்தை, கீள், உடை, கோவணம், கருத்து அறிந்து உதவி,
வந்த செல்வத்தின் வளத்தினால் வரும் பயன் கொள்வார். 25

முன்பு திருக் காளத்தி முதல்வனார் அருள் நோக்கால்,
இன்புறு வேதகத்து இரும்பு பொன் ஆனாற்போல், யாக்கை-
தன் பரிசும் வினை இரண்டும் சாரும் மலம் மூன்றும் அற,
அன்பு பிழம்பாய்த் திரிவார், அவர் கருத்தின் அளவினரோ? 26

'அவனுடைய வடிவு எல்லாம் நம் பக்கல் அன்பு என்றும்,
அவனுடைய அறிவு எல்லாம் நமை அறியும் அறிவு என்றும்,
அவனுடைய செயல் எல்லாம் நமக்கு இனியவாம் என்றும்,
அவனுடைய நிலை இவ்வாறு அறி நீ' என்று அருள்செய்தார். 27

மெய்யன்பர் மனத்து அன்பின் விளைந்த இசைக் குழல் ஓசை
வையம் தன்னையும் நிறைத்து, வானம் தன் வயமாக்கி,
பொய்யன்புக்கு எட்டாத பொற் பொதுவில் நடம் புரியும்
ஐயன்தன் திருச் செவியின் அருகு அணையப் பெருகியதால். 28

Koviloor Digital Library

கோட்டு மலரும், நில மலரும், குளிர் நீர் மலரும், கொழுங்கொடியின்
தோட்டு மலரும், மா மலரும், — சுருதிமலரும் திருவாயில்
காட்டு முறுவல் நிலவு அலர, கனக வரையின் பன்னக நாண்
பூட்டும் ஒருவர் திருமுடிமேல் புனையலாகும் மலர் — தெரிந்து, 29

கொண்டுவந்து, தனி இடத்தின் இருந்து, கோக்கும் கோவைகளும்,
இண்டைச் சுருக்கும், தாமமுடன் இணைக்கும் வாசமாலைகளும்,
தண்டில் கட்டும் கண்ணிகளும், தாளில் பிணைக்கும் பிணையல்களும்,
நுண் தாது இறைக்கும் தொடையல்களும், சமைத்து நுடங்கும் நூல்மார்பர்,

ஆங்கு அப் பணிகளானவற்றுக்கு அமைத்த காலங்களின் அமைத்து,
தாங்கிக் கொடு சென்று, அன்பினொடும் சாத்தி, வாய்ந்த அர்ச்சனைகள்
பாங்கின் புரிந்து பரிந்துள்ளார், பரமர் பதிகப் பற்றான
ஓங்கிச் சிறந்த அஞ்செழுத்தும் ஓவா நாவின் உணர்வினர். 31

தெள்ளு தண் புனல் கழுத்து அளவாய் இடைச் செறிய,
உள்ளுறப் புக்கு நின்று, கை உச்சிமேல் குவித்து
தள்ளு வெண் திரைக் கங்கை நீர் ததும்பிய சடையார்
கொள்ளும் அன்பினில், உருத்திரம் குறிப்பொடு பயின்றார். 32

Koviloor Digital Library

'எண் இல் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மையாவது பூசனை' என உரைத்தருள—
அண்ணலார்தமை அர்ச்சனை புரிய ஆதரித்தாள்,
பெண்ணின் நல்லவள் ஆயின பெருந் தவக் கொழுந்து. 33

கொய்த பல் மலர், கம்ப மா நதியில்
குலவு மஞ்சனம், நிலவு மெய்ப் பூச்சு,
நெய் தரும் கொழுந் தூப தீபங்கள்,
நிறைந்த சிந்தையில் நீடிய அன்பின்,
மெய் தரும்படி வேண்டின எல்லாம்
வேண்டும் போகினில் உதவ, மெய்ப் பூசை
எய்த, ஆகம விதி எலாம் செய்தாள் — உயிர்கள்
யாவையும் ஈன்ற எம்பிராட்டி. 34

'கரம் தரும் பயன் இது' என உணர்ந்து,
கம்பம் மேவிய உம்பர் நாயகர்பால்
நிரந்த காதல் செய் உள்ளத்தள் ஆகி,
நீடு நன்மைகள் யாவையும் பெருக,

KOVILOOR MADALAYAM
(KOVILOOR 630 307)
(NEAR) KARAIKUDI

Koviloor Digital Library

வரம் தரும் பொருள் ஆம் மலைவல்லி
மாறு இலா வகை மலர்ந்த பேர் அன்பால்,
சிரம் பணிந்து எழு பூசை நாள்தோறும்
திருவுளம் கொளப் பெருகியது அன்றே. 35

மண்ணின்மிசை வந்ததற்பின், மனம் முதலாயின மூன்றும்
அண்ணலார் சேவடியின் சார்வாக அணைவிப்பார்,
புண்ணிய மெய்த் தொண்டர் திருக்குறிப்பு அறிந்து போற்றுநிலைத்
திண்மையினால், திருக்குறிப்புத் தொண்டர் எனும் சிறப்பினார்.

அண்டர் பிரானும், தொண்டர்தமக்கு
அதிபன் ஆக்கி, 'அனைத்தும் நாம்
உண்ட கலமும் உடுப்பனவும்
சூடுவனவும் உனக்காக,
சண்டீசனும் ஆம் பதம் தந்தோம்'
என்று, அங்கு அவர் பொன்-தட முடிக்குத்
துண்ட மதி சேர் சடைக் கொன்றை
மாலை வாங்கிச் சூட்டினார். 37

கா வளர்த்தும், குளம் [illegible] வழுவாமல்
Koviloor Digital Library
மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்து அளித்தும், விருந்து அளித்தும்,
நாவலர்க்கு வளம் பெருக நல்கியும், நானிலத்து உள்ளோர்
யாவருக்கும் தவிராத ஈகைவினைத் துறை நின்றார். 38

தூய வெண் நீறு துதைந்த பொன் மேனியும், தாழ் வடமும்,
நாயகன் சேவடி தைவரும் சிந்தையும், நைந்து உருகிப்
பாய்வது போல் அன்பு நீர் பொழி கண்ணும், பதிகச்செஞ்சொல்
மேய செவ் வாயும் உடையார் புகுந்தனர், வீதியுள்ளே. 39

கையும் தலைமிசை புனை அஞ்சலியன;
கண்ணும் பொழி மழை ஒழியாதே
பெய்யும் தகையன; கரணங்களும் உடன்
உருகும் பரிவின; பேறு எய்தும்
மெய்யும் தரைமிசை விழும் முன்பு எழுதரும்;
மின் தாழ் சடையொடு நின்று ஆடும்
ஐயன் திருநடம் எதிர் கும்பிடும் அவர்
ஆர்வம் பெருகுதல் அளவு இன்றால். 40

Koviloor Digital Library

அருள் பெருகு தனிக் கடலும் உலகுக்கு எல்லாம்
அன்பு செறி கடலும் ஆம் எனவும் -- ஓங்கும்
பொருட் சமய முதல் சைவ நெறிதான் பெற்ற
புண்ணியக் கண் இரண்டு எனவும் — புவனம் உய்ய
இருட் கடு உண்டவர் அருளும் அகிலம் எல்லாம்
ஈன்றருள்தன் திருவருளும் எனவும் — கூடி,
தெருள் கலைஞானக் கன்றும் அரசும் சென்று,
செஞ் சடை வானவர் கோயில் சேர்ந்தார் அன்றே. 41

நன்மை பெருகு அருள்நெறியே வந்து அணைந்து, நல்லூரில்
மன்னு திருத்தொண்டனார் வணங்கி, மகிழ்ந்து, எழும் பொழுதில்,
'உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்' என்று, அவர்தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான், சிவபெருமான். 42

மார்பு ஆரப் பொழி கண்ணீர்-மழை வாரும் திருவடிவும்,
மதுர வாக்கில்
சேர்வு ஆகும் திருவாயில் தீம் தமிழின் மாலைகளும்,
செம் பொன்-தாளே

Koviloor Digital Library

சார்வு ஆன திருமன[illegible]ப் படையும்,
தாமும் ஆகி,
பார் வாழ, திருவீதிப் பணிசெய்து, பணிந்து ஏத்தி,
பரவிச் செல்வார். 43

'அண்ணலே! எனை ஆண்டுகொண்டு அருளிய அமுதே!
விண்ணிலே மறைந்து அருள்புரி வேத நாயகனே!
கண்ணினுல் திருக் கயிலையில் இருந்த நின் கோலம்
நண்ணி நான் தொழ, நயந்து அருள்புரி' எனப் பணிந்தார். 44

பொன்மலைக்கொடியுடன் அமர் வெள்ளியம் பொருப்பின்
தன்மை ஆம்படி சத்தியும் சிவமும் ஆம் சரிதை,
பன்மை யோனிகள் யாவையும், பயில்வன பணிந்தே,
மன்னு மா தவர் தம்பிரான் கோயில் முன் வந்தார். 45

வெள்ளி வெற்பின்மேல் மரகதக்கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேர் ஒளிப் பவள வெற்பு என, இடப் பாகம்
கொள்ளும் மா மலையாளுடன் கூட வீற்றிருந்த
வள்ளலாரை முன் கண்டனர் — வாக்கின் மன்னவனர். 46

Koviloor Digital Library

தொழுது, பல வகையாலும் சொல்-தொடை வண் தமிழ் பாடி,
வழு இல் திருப்பணி செய்து, மனம் கசிவுற்று, எப்பொழுதும்
ஒழுகிய கண் பொழி புனலும், ஓவாது சிவன் தாள்கள்
தழுவிய சிந்தையில் உணர்வும் தங்கிய நீர்மையின் சரித்தார். 47

இறவாத இன்ப அன்பு வேண்டி, பின் வேண்டுகின்றார் :
'பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்பு உண்டேல், உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும், நான் மகிழ்ந்து பாடி,
அறவா! நீ ஆடும்போது, உன் அடியின்கீழ் இருக்க' என்றார். 48

'வேத உள்ளுறையாவன: விரி புனல் வேணி
நாதர்தம்மையும் அவர் அடியாரையும் நயந்து,
பாதம் அர்ச்சனை புரிவதும் பணிவதும்' என்றே,
காதலால், அவை இரண்டுமே செய் கருத்து உடையார். 49

வேத நெறி தழைத்து ஓங்க, மிகு சைவத் துறை விளங்க,
பூத பரம்பரை பொலிய, புனித வாய் மலர்ந்து அழுத
சீத வள வயல் புகலித் திருஞான சம்பந்தர்
பாத-மலர் தலைக் கொண்டு, திருத்தொண்டு பரவுவாம். 50

Koviloor Digital Library

சிவன் அடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்,
பவ-அதனை அற மாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்,
உவமை இலாக் கலை ஞானம், உணர்வு அரிய மெய்ஞ்ஞானம்,
தவ முதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார், அந் நிலையில். 51

மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும், வந்து அடையின்,
கண்ணுதலான் பெருங் கருணை கைக்கொள்ளும் எனக் காட்ட,
எண்ணம் இலா வல் அரக்கன் எடுத்து முறிந்து இசை பாட,
அண்ணல் அவற்கு அருள்புரிந்த ஆக்கப்பாடு அருள்செய்தார்.

சிந்தை இடையறு அன்பும், திருமேனிதன்னில் அசைவும்,
கந்தம் மிகை ஆம் கருத்தும், கை உழவாரப் படையும்,
வந்து இழி கண்ணீர் மழையும், வடிவில் பொலி திருநீறும்,
அந்தம் இலாத் திரு வேடத்து அரசும் எதிர் வந்து அணைய— 53

கண்ட கவுணியக் கன்றும், கருத்தில் பரவு மெய்க் காதல்,
'தொண்டர் திருவேடம் நேரே தோன்றியது' என்று தொழுதே,
அண்டரும் போற்ற அணைந்து, அங்கு அரசும் எதிர் வந்து இறைஞ்ச,
மண்டிய ஆர்வம் பெருக, மதுரமொழி அருள்செய்தார். 54

Koviloor Digital Library

'சென்ற காலத்தின் பழுது இலாத் திறமும்
இனி எதிர்காலத்தின் சிறப்பும்
இன்று எழுந்தருளப் பெற்ற பேறு-இதனால்,
எற்றைக்கும் திருவருள் உடையேம்!
நன்றி இல் நெறியில் அழுந்திய நாடும்
நல்-தமிழ் வேந்தனும் உய்ந்து,
வென்றி கொள் திரு நீற்று ஒளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம்!' என்பார். 55

ஞானத்தின் திரு உருவை, நான்மறையின் தனித் துணையை,
வானத்தின் மிசை அன்றி மண்ணில் வளர் மதிக் கொழுந்தை,
தேன் நக்க மலர்க் கொன்றைச் செஞ்சடையார் சீர் தொடுக்கும்
கானத்தின் எழு பிறப்பை, — கண் களிப்பக் கண்டார்கள். 56

'ஆலமே அமுதம் ஆக உண்டு, வானவர்க்கு அளித்து,
காலனை மார்க்கண்டர்க்காக் காய்ந்தனை; அடியேற்கு இன்று,
ஞாலம் நின் புகழே ஆகவேண்டும் — நான்மறைகள் ஏத்தும்
சீலமே! ஆலவாயில் சிவபெருமானே!' என்றார். 57

Koviloor Digital Library

மருவிய ஏழ் இசை பொழிய, மனம் பொழியும் பேர் அன்பால்
பெருகிய கண்மழை பொழிய, பெரும் புகலிப் பெருந்தகையார்
உருகிய அன்பு உள் அலைப்ப, உமை தழுவக் குழைந்தவரைப்
பருகிய மெய்யுணர்வினொடும் பரவியே புறத்து அணைந்தார். 58

'மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் மதி சூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்,
கண்ணினால் அவர் நல் விழாப் பொலிவு கண்டு ஆர்தல்,
உண்மை ஆம் எனில், உலகர்முன் வருக!' என உரைப்பார். 59

எண் இல் ஆண்டு எய்தும் வேதா, படைத்தவள் எழிலின் வெள்ளம்
நண்ணும் நான்முகத்தால் கண்டான்; அவளினும் நல்லாள் தன்பால்,
புண்ணியப் பதினாறு ஆண்டு பேர் பெறும் புகலி வேந்தர்,
கண்ணுதல் கருணை வெள்ளம் ஆயிரம் முகத்தால் கண்டார். 60

அறு வகை விளங்கும் சைவத்து அளவு இலா விரதம் சாரும்
நெறி வழி நின்ற வேடம் நீடிய தவத்தின் உள்ளோர்—
மறு அறு மனத்தில் அன்பின் வழியினால் வந்த யோகக்
குறி நிலை பெற்ற தொண்டர் — குழாங் குழாம் ஆகி ஏக. 61

Koviloor Digital Library

‘அண்ணலார் அடிகள் மறக்கினும், நாம
அச்செழுத்து அறிய எப்பொழுதும்,
எண்ணிய நாவே இன் சுவை பெருக,
இடையறாது இயம்பும்’ என்று இதனைத்
திண்ணிய உணர்வில் கொள்பவர், ‘மற்றுப்
பற்று இலேன்’ எனச் செழுந் தமிழால்
நண்ணிய அன்பின் பிணிப்புற நவின்றார்,
நமச்சிவாயத் திருப்பதிகம். 62

காண்டலும், தொழுது, வீழ்ந்து, உடன் எழுந்து,
கரை இல் அன்பு என்பினை உருக்க,
பூண்ட ஐம் புலனில் புலப்படா இன்பம்
புணர்ந்து மெய்யுணர்வினில் பொங்க,
தாண்டவம் புரியும் தம்பிரானாரைத்
தலைப்படக் கிடைத்தபின், சைவ
ஆண்டகையாருக்கு அடுத்த அந் நிலைமை விளைவை
ஆர் அளவு அறிந்து உரைப்பார்! 63

Koviloor Digital Library

'விண் ஆள்வார் அமுது உண்ண, மிக்க பெரு விடம் உண்ட
கண்ணாளா! கச்சி ஏகம்பனே! — கடையானேன்
எண்ணாத பிழை பொறுத்து, இங்கு யான் காண, — எழில் பவள
வண்ணா! — கண் அளித்தருள்வாய்!' என வீழ்ந்து வணங்கினார்.

விழுந்தும் எழுந்தும், பல முறையால் மேவிப் பணிந்து, மிகப் பரவி,
எழுந்த களிப்பினால், ஆடிப் பாடி, இன்ப வெள்ளத்தில்
அழுந்தி, இரண்டு கண்ணாலும் அம் பொற் புற்றினிடை எழுந்த
செழுந் தண் பவளச் சிவக் கொழுந்தின் அருளைப் பருகித் திளைக்கின்றார்.

எத்தன்மையர் ஆயினும், 'ஈசனுக்கு அன்பர்' என்றால்,
'அத்தன்மையர்தாம் நமை ஆள்பவர்' என்று கொள்வார்,
'சித்தம் தெளியச் சிவன் அஞ்செழுத்து ஓதும் வாய்மை
நித்தம் நியமம்' எனப் போற்றும் நெறியில் நின்றார். 66

துன்றும் புலன் ஐந்துடன் ஆறு தொகுத்த குற்றம்
வென்று, 'இங்கு இது நல் நெறி சேரும் விளக்கம்' என்றே
வன்தொண்டர் பாதம் தொழுது, ஆன சிறப்பு வாய்ப்ப,
என்றும் நிலவும் சிவலோகத்தில் இன்பம் உற்றார். 67

Koviloor Digital Library

‘‘செய் வினையும், செய்வானும், அதன் பயனும், கொடுப்பானும்,
மெய் வகையால் நான்கு ஆகும் விதித்த பொருள்’ எனக் கொண்டே,
‘‘இவ் இயல்பு சைவ நெறி அல்லவற்றுக்கு இல்லை’ என,
உய் வகையால் பொருள் சிவன் என்று அருளாலே உணர்ந்து அறிந்தார்.

‘எந் நிலையில் நின்றாலும், எக் கோலம் கொண்டாலும்,
மன்னிய சீர்ச் சங்கரன் தாள் மறவாமை பொருள்’ என்றே,
துன்னிய வேடம் தன்னைத் துறவாதே, தூய சிவம்-
தன்னை மிகும் அன்பினால் மறவாமை தலை நிற்பார். 69

காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணம் ஆய்,
நீள் நாகம் அணிந்தார்க்கு நிகழ் குறி ஆம் சிவலிங்கம்,
நாணாது நேடிய மால் நான்முகனும் காண, நடுச்
சேண் ஆரும் தழல்-பிழம்பாய்த் தோன்றியது தெளிந்தாராய் 70

கல்லாலே எறிந்ததுவும் அன்பானபடி காணில்,
வில் வேடர் செருப்பு அடியும் திரு முடியில் மேவிற்றால் ;
நல்லார் மற்று அவர் செய்கை அன்பாலே நயந்ததனை
அல்லாதார் கல் என்பார் ; அரனார்க்கு அஃது அலர் ஆமால். 71

Koviloor Digital Library

ஆளும் அங்கணருக்கு அன்பர் அணைந்த பொழுது, அடியில் தாழ்ந்து,
மூளும் ஆதரவு பொங்க, முன்பு நின்று, இனிய கூறி,
நாளும் நல் அமுதம் ஊட்டி, நயந்தன எல்லாம் நல்கி,
நீளும் இன்பத்துள் தங்கி, நிதி மழை மாரி போன்றார். 72

நறை இதழித் திரு முடியார் அடியாரை, நாள்தோறும்,
முறைமையினில் திரு அமுது முன் ஊட்டி, பின் உண்ணும்,
நிறை உடைய பெரு விருப்பால், நியதியாகக் கொள்ளும்
துறை வழுவா வகை ஒழுகும் தூய தொழில் தலைநின்றார். 73

தூய திரு அமுது, கனி, கன்னல், அறு சுவைக் கறி, நெய்
பாய தயிர், பால், இனிய பண்ணியம், உண் நீர், அமுதம்
மேயபடியால் அமுதுசெய்விக்க, மிசைந்து அடியார்,
மா இரு ஞாலம் போற்ற வரும் இவர்பால் மனம் மகிழ்ந்தார். 74

திருமஞ்சனமும் கொணர்ந்து, திரு அலகும் இட்டு, திரு மெழுக்கு
வரும் அன்புடன் இன்புறச் சாத்தி, மற்றும் உள்ள திருப் பணிகள்
பெருமை பிறங்கச் செய்து அமைத்து, பேணும் விருப்பில் திருப்பாட்டும்
ஒருமை நெறியின் உணர்வு வர ஓதிப் பணிந்தே ஒழுகும் நாள்— 75

Koviloor Digital Library

வாசத் திரு மஞ்சனம், பள்ளித் தாமம், சாந்தம், மணித் தூபம்,
தேசின் பெருகும் செழுந் தீபம் முதலாயினவும் திரு அமுதும்,
ஈசர்க்கு ஏற்ற பரிசினல் அருச்சித்தருள, எந்நாளும்
பூசைக்கு அமர்ந்த பெருங் கூத்தர் பொற்பு ஆர் சிலம்பின் ஒலிஅளித்தார்.

நம்பர் தாளின் வழிபாட்டால்
நாளும் இன்புற்று அமர்கின்ருர்,
இம்பர் உலகில் இரவலர்க்கும்
வறியோர் எவர்க்கும் ஈகையினல்
செம் பொன் மழையாம் எனப் பொழிந்து,
திருந்து வென்றியுடன் பொருந்தி,
உம்பர் போற்றத் தம் பெருமாற்கு
உரிய வேள்வி பல செய்தார். 77

முன்பு பணிந்த பெருமானைத் தாமும் பணிந்து முகந்து எடுத்தே,
அன்பு பெருகத் தழுவ, விரைந்து அவரும் ஆர்வத்தொடு தழுவ,
இன்ப வெள்ளத்திடை நீந்தி ஏற மாட்டாது அலைவார் போல்,
என்பும் உருக, உயிர் ஒன்றி, உடம்பும் ஒன்ரும் என இசைந்தார்.

Koviloor Digital Library

ஒருவர் ஒருவரில் க[illegible] இன்ப மொழி உரைத்து,
'மருவ இனியார்பால் செய்வது என் ஆம்' என்னும் மகிழ்ச்சியினால்,
பருவ மழைச் செங் கைப் பற்றிக்கொண்டு, பரமர் தாள் பணிய,
தெருவு நீங்கிக் கோயிலினுள் புகுந்தார், சேரமான் தோழர். 79

நல்ல நந்தனவனப் பணி செய்பவர்,
நறுந் துணர் மலர் கொய்வோர்,
பல் பணித் தொடை புனைபவர், கொணர்
திருமஞ்சனப் பணிக்கு உள்ளோர்,
அல்லும் நண் பகலும் திரு அலகிட்டுத்
திரு மெழுக்கு அமைப்போர்கள்,
எல்லை இல் விளக்கு எரிப்பவர், திருமுறை
எழுதுவோர், வாசிப்போர்— 80

இணைய பல் திருப் பணிகளில் அணைந்தவர்க்கு
ஏற்ற அத் திருத்தொண்டின்
வினை விளங்கிட வேண்டிய குறை எலாம்
முடித்து மேவிடச் செய்தே,

Koviloor Digital Library

அனைய அத் திறம் புரிதலின் தொண்டரை
ஆக்கி, அன்புறு வாய்மை
மனையறம் புரிந்து, அடியவர்க்கு இன்புற
வழிபடும் தொழில் மிக்கார். 81

அம் பொன் நீடும் அம்பலத்துள் ஆரா அமுதத் திரு நடம் செய்
தம்பிரானார் புவியில் மகிழ் கோயில் எல்லாம், தனித் தனியே,
இம்பர் ஞாலம் களிகூர, எய்தும் பெரும் பூசனை இயற்றி,
உம்பர் மகிழ அரசு அளித்தே, உமையாள் கணவன் அடி சேர்ந்தார்.

ஆன அன்பர்தாம் என்றும் அரனார் அன்பர்க்கு அமுது செய,
மேன்மை விளங்கு போனகமும், விரும்பு கறி, நெய், தயிர், தீம் பால்,
தேனின் இனிய கனி, கட்டி, திருந்த அமுது செய்வித்தே,
ஏனை நிதியம் வேண்டுவன எல்லாம் இன்பமுற அளிப்பார். 83

செக்கு நிறை எள் ஆட்டி, பதம் அறிந்து, திலதயிலம்
பக்கம் எழ, மிக உழந்தும், பாண்டில் வரும் எருது உய்த்தும்,
தக்க தொழில் பெருங் கூலி தாம் கொண்டு, தாழாமை
மிக்க திரு விளக்கு இட்டார், விழுத் தொண்டு விளக்கிட்டார். 84

Kovilooor Digital Library

மறவாமையால் அமைத்த மனக் கோயில் உள் இருத்தி,
உறவு-ஆதிதனை உணரும் ஒளி விளக்குச் சுடர் ஏற்றி,
இறவாத ஆனந்தம் எனும் திருமஞ்சனம் ஆட்டி,
அறவாணர்க்கு அன்பு என்னும் அமுது அமைத்து, அர்ச்சனை செய்வார்.

இன்ன வகையால் பெற்ற நிதி எல்லாம் ஈசன் அடியார்கள்
சொன்ன சொன்னபடி நிரம்பக் கொடுத்து, தூய போனகமும்,
கன்னல், நறு நெய், கறி, தயிர், பால், கனி உள்ளுறுத்த கலந்து அளித்து,
மன்னும் அன்பின் நெறி பிறழா வழித் தொண்டு ஆற்றி வைகினர். 86

ஈசனையே பணிந்து, உருகி, இன்பம் மிகக் களிப்பு எய்தி,
பேசின வாய் தழுதழுப்ப, கண்ணீரின் பெருந் தாரை
மாசு இலா நீறு அழித்து அங்கு அருவிதர, மயிர் சிலிர்ப்ப,
கூசியே உடல் கம்பித்திடுவார் — மெய்க் குணம் மிக்கார். 87

நின்றாலும் இருந்தாலும், கிடந்தாலும் நடந்தாலும்,
மென்றாலும் துயின்றாலும், விழித்தாலும் இமைத்தாலும்,
மன்று ஆடும் மலர்ப் பாதம் ஒரு காலும் மறவாமை
குன்றாத உணர்வு உடையார் — தொண்டர் ஆம் குணம் மிக்கார். 88

Koviloor Digital Library

எப்போதும் இனிய பிரான் இன் அருளால் அதிகரித்து,
மெய்ப் போத நெறி வந்த விதி முறைமை வழுவாமே,
அப்போதைக்கு அப்போதும் ஆர்வம் மிகும் அன்பினராய்,
முப் போதும் அர்ச்சிப்பார் முதல் சைவர் ஆம் முனிவர். 89

மூவேந்தர் தமிழ் வழங்கும் நாட்டுக்கு அப்பால்
முதல்வனார் அடிச் சார்ந்த முறைமை யோரும் —
நா வேய்ந்த திருத்தொண்டத் தொகையில் கூறும்
நல் தொண்டர் காலத்து முன்னும் பின்னும்,
பூ வேய்ந்த நெடுஞ் சடை மேல் அடம்பு, தும்பை,
புதிய மதி, நதி, இதழி பொருந்த வைத்த
சே வுந்து வெல் கொடியான் அடிச் சார்ந்தாரும் —
செப்பிய அப்பாலும் அடிச் சார்ந்தார்தாமே. 90

'நின்ற ஊர்ப் பூசல் அன்பன் நெடிது நாள் நினைந்து செய்த
நன்று நீடு ஆலயத்துள் நாளை நாம் புகுவோம்; நீ இங்கு
ஒன்றிய செயலை நாளை ஒழிந்து பின் கொள்வாய்' என்று, [போந்தார்,
கொன்றை வார் சடையார் தொண்டர் கோயில் கொண்டருளப்

Kovilloor Digital Library

மங்கையர்க்குத் தனி அரசி, எங்கள் தெய்வம்,
வளவர் திருக் குலக் கொழுந்து, வளைக் கை மானி,
செங்கமலத் திரு மடந்தை, கன்னி நாடாள்,
தென்னர் குலப் பழி தீர்த்த தெய்வப் பாவை,
எங்கள் பிரான் சண்பையர் கோன் அருளினாலே,
இருந் தமிழ் நாடு உற்ற இடர் நீக்கி, தங்கள்
பொங்கு ஒளி வெண் திரு நீறு பரப்பினாரைப்
போற்றுவார் கழல் எம்மால் போற்றலாமே! 92

ஆங்கு அவர் மனத்தின் செய்கை அரன் அடிப்போதுக்கு ஆக்கி,
ஓங்கிய வாக்கின் செய்கை உயர்ந்த அஞ்செழுத்துக்கு ஆக்கி,
தாங்கு கைத் தொழிலின் செய்கை தம்பிரான் அடியார்க்காகப்
பாங்குடை உடையும் கீளும் பழுது இல் கோவணமும் நெய்வார். 93

சென்று கண்ணுதல் திருமுன்பு தாழ்ந்து வீழ்ந்து எழுந்து,
சேணிடை விட்ட
கன்று கோவினைக் கண்டு அணைந்தது எனக்
காதலின் விரைந்து எய்தி,

Koviloor Digital Library

நின்று போற்றிய தனிப் பெருந் தொண்டரை
நேரிழை வலப் பாகத்து
ஒன்றும் மேனியர், 'ஊரனே! வந்து அணை'
என்றனர், உலகு உய்ய. 94

'அடியனேன் பிழை பொறுத்து, எனை ஆண்டு கொண்டு,
அத் தொடக்கினை நீக்கி,
முடிவு இலா நெறி தரும் பெருங் கருணை என்
தரத்ததோ!' என, முன்னர்ப்
படியும் நெஞ்சொடு பல் முறை பணிந்து எழும்
பரம்பரை ஆனந்த-
வடிவு நின்றது போன்று இன்ப வெள்ளத்துள்
மலர்ந்தனர் வன்தொண்டர். 95

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்,
ஒன்று காதலித்து, உள்ளமும் ஓங்கிட,
மன்றுளார் அடியார்-அவர் வான் புகழ்
நின்றது எங்கும், நிலவி, உலகு எலாம். 96

Koviloor Digital Library

பாடல் முதற்குறிப்பு அகராதி

[எண் - பாட்டு எண்]

அடியனேன் பிழை	95
அண்டர் பிரானும்	37
அண்ணலார் அடிகள்	62
அண்ணலே! எனை	44
அம் பொன் நீடும்	82
அரசு கொள் கடன்கள்	4
அருள் பெருகு தனிக்	41
அவனுடைய வடிவு	27
அறு வகை விளங்கும்	61
அன்பனே! அன்பர்பூசை	22
ஆங்கு அப் பணி	31
ஆங்கு அவர் மனத்தின்	93
ஆதி ஆய், நடுவும் ஆகி,	14
ஆரம் என்பு புனைந்த	20
ஆரம் கண்டிகை	8
ஆலமே அமுதம் ஆக	57
ஆலும் அங்கணருக்கு	72
ஆன அன்பர்தாம்	83
இறவாத இன்ப அன்பு	48
இன்ன வகையால்பெற்ற	86
இனைய பல் திருப்பணி	81
ஈசனையே பணிந்து,	87
உலகு எலாம்	1
எண் இல் ஆகமம்	33
எண் இல் ஆண்டு	60
எத்தன்மையர் ஆயினும்	66
எந் நிலையில் நின்றாலும்	69
எப்போதும் இனிய	89
என்றும் இன்பம்	96
ஐந்து பேர் அறிவும்	11
ஒருவர் ஒருவரில்	79
கண்ட கவுணியக்	54
கரம் தரும் பயன் இது	35
கல்லாலே எறிந்ததுவும்	71
கற்பகத்தின்	13
கற்பனை கடந்த சோதி	15
காண்டலும், தொழுது	63
காணாத அருவினுக்கும்	70
கா வளர்த்தும்	38
கேடும் ஆக்கமும்	7
கையும் தலைமிசை	40
கொண்டுவந்து, தனி	30
கொண்டுவந்து, மனைப்	21
கொய்த பல் மலர்	34

Koviloor Digital Library

கோட்டு மலரும் 29
சிந்தை இடையறு 53
சிந்தை செய்வது சிவன் 25
சிவன் அடியே சிந்திக்கும் 51
செக்கு நிறை எள் 84
செய் வினையும் 68
சென்ற காலத்தின் 55
சென்று கண்ணுதல் 94
சொல்லுவது அறியேன் 19
ஞாலம் உய்ய 24
ஞானத்தின் திருஉருவை 56
ஞானமே முதலா 17
திருமஞ்சனமும் 75
துன்றும் புலன் 67
தூய திரு அமுது, கனி 74
தூய வெண் நீறு 39
தெள் நிலா மலர்ந்த 12
தெள்ளு தண் புனல் 32
தேடிய மாடு நீடு 23
தொழுது பல வகை 47
நம்பர் தாளின் 77
நல்ல நந்தனவனப் பணி 80
நன்மை பெருகு 42
நறை இதழித் 73
நின்ற ஊர்ப் பூசல் 91
நின்றாலும் இருந்தாலும் 88
பத்தியின் பாலர் ஆகி 3
பூதம் ஐந்தும் 6
பொய் கடிந்து அறத்தின் 18
பொன்மலைக்கொடி 45
மங்கையர்க்குத் தனி 92
மண்ணின்மிசை வந்த 36
மண்ணினில் பிறந்தார் 59
மண்ணுலகில் வாழ்வார் 52
மதி வளர் சடை முடி 2
மருவிய ஏழ் இசை 58
மற்று நீ வன்மை பேசி 9
மறவாமையால் அமைத்த 85
மறு இலா மரபின் 16
மன்றுள் ஆடும் மதுவின் 10
மாசு இலாத மணி 5
ம[illegible] பொழி 43
முன்பு திருக்காளத்தி 26
முன்பு பணிந்த 78
மூவேந்தர் தமிழ் 90
மெய்யன்பர் மனத்து 28
வாசத் திருமஞ்சனம் 76
விண் ஆள்வார் அமுது 64
விழுந்தும் எழுந்தும், 65
வெள்ளி வெற்பின்மேல் 46
வேத உள்ளுறையாவன 49
வேத நெறி தழைத்து 50

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: 04565-238461)

சாது அச்சுக்கூடம், மயிலாப்பூர், சென்னை-4

Koviloor Digital Library

†காம்பீலி-நேசர் 30 (41[illegible])
*காவிரிப்பூம் பட்டினம்-இயற்பகையார் 3 (404)
†கொடுங்கோளூர்-சேரமான் 44, 45 (3753)
கொடும்பாளூர்-இடங்கழியார் 65 (4115)
25 *கோவலூர்-மெய்ப்பொருளார் 5 (467)
சங்கமங்கை-சாக்கியர் 41 (3642)
*சாத்தமங்கை-நீலநக்கர் 4/30 (1833)
சாத்தனூர்-மூலர் 36 (3579)
*சீகாழி—(1) கணநாதர் 6/46 (3928)
(2) சம்பந்தர் 33, 34 (1905)
30 *செங்காட்டங்குடி-சிறுத்தொண்டர் 6/43 (3664-5)
†செங்குன்றூர்-விறன்மிண்டர் 1/6 (492)
*செருவிலிபுத்தூர்-புகழ்த்துணையார் 67 (4132)
*சேய்ஞலூர்-சண்டேசுரர் 22 (1211)
†தஞ்சாவூர்-செருத்துணையார் 9/66 (4125)
35 தலையூர்-உருத்திரபசுபதியார் 19 (1036)
†திங்களூர்-அப்பூதியடிகள் 29 (1787)
†திருநின்றவூர்-பூசலார் 11/78 (4177)
*தில்லை-நீலகண்டர் 2 (360)
நாகைப்பட்டினம்-அதிபத்தர் 7/52 (3996-7)
40 *நாட்டியத்தான்குடி-கோட்புலியார் 68 (4139)
*நாவலூர்—(1) இசைஞானியார் 85
(2) சடையனூர் 84
(3) சுந்தரர் 11/27, 64 (148)
*நீரேர்-முனையடுவார் 62 (4093-4)

Koviloor Digital Library

*பழையாறை-அமர்நீதியார் 7 (502)

*புகலூர்-முருகர் 18 (1022)

45 *பெண்ணாகடம்-கலிக்கம்பர் 53 (4017)

பெருமங்கலம்-ஏயர்கோன்கலிக்காமர் 35 (3160)

†பெருமிழலை-குறும்பர் 4/27 (1716)

மங்கலவூர்-ஆனாயர் 15 (937)

மணமேற்குடி-குலச்சிறையார் 26 (1700)

50 *மதுரை—(1) நெடுமாறர் 8/160 (4083)

(2) மங்கையர்க்கு அரசி 29

(3) மூர்த்தியார் 17 (976)

*மயிலாப்பூர்-வாயிலார் 8/61 (4083-4)

†வரிஞ்சியூர்-சத்தியார் 7/55 (4044-5)

53 *வேற்காடு-மூர்க்கர் 38 (3622-3)

ஊர் குறிக்கப்படாதவர்கள் மூவர் (அரசர்கள்)

(1) கழற்சிங்கர் 64

(2) கோச்செங்கண்ணர் 81, 82 (சோ)

(3) நரசிங்கமுனையரையர் 51 (நடு) (3988)

---

*இக்குறி இட்டவை தேவாரப் பதிகத் தலம் (27)

†இக்குறி இட்டவை தேவார வைப்புத் தலம் (12)

ஏனையவை திருத்தொண்டர் புராணத் தலம் (14)

இறுதியில் உள்ள முதல் எண் 2-ஆகில் முன் எண் திருத்தொண்டத் தொகைப் பாடல் எண். 2-ஆம் எண்ணும், தனி எண்ணும் திருத்தொண்டர் திருவந்தாதிப் பாடல் எண். நக வளைவில் உள்ள எண் பெரியபுராணப் பாடலின் தொடர் எண்.

கிடைக்குமிடம் :—பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1